செ.வெ.எண்: 67 நாள்: 29.11.2017

**திருநெல்வேலி மேலப்பாளையம் அன்பு நகர் பகுதியில் நடைபெற்ற வரும் மெகா தூய்மை பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.**

--------

திருநெல்வேலி மேலப்பாளையம் அன்பு நகர் பகுதியில் மெகா தூய்மை பணிகள் மற்றும் கொசு ஒழிப்பு பணிகள் இன்று (29.11.2017) நடைபெற்றது. இப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்கள்.

அன்பு நகர், லக்கி காலனி மற்றும் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வீடு வீடாக சென்று ஆய்வு மேற்கொண்டார்கள். காலை, மாலை இரண்டு நேரங்களில் கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்க உத்தரவிட்டார். இப்பகுதிகளில் தூய்மை பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென உத்தரவிட்டார். கொசு ஒழிப்பு பணியாளர்களிடம் அனுமதிக்காத வீடுகளுக்கும், கொசு புழு உள்ள வீடுகளுக்கும் நோட்டீஸ் மற்றும் அபராதம் விதிக்க மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இப்பகுதி பொதுமக்களிடம் டெங்கு விழிப்புணர்வு குறித்து எடுத்துரைத்தார்.

இந்த ஆய்வின் போது உதவி ஆட்சியர் பயிற்சி திரு.இளம்பகவத், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையாளர் (பொ) திரு.நாராயணநாயர், மாநகர நல அலுவலர் மரு.பொற்செல்வன், மேலப்பாளையம் மண்டல உதவி ஆணையர் திருமதி.கவிதா, மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் திரு.கருப்பசாமி, பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.தங்கராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.